# திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம் தண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் /நிர்வாக அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

*பிறப்பிப்பவர் :* திரு. T.E.சசிகுமார்

<u>ந.க. எண் 19 / 2023 - 24</u> நாள் : 15.04.2024

பொருள் :- மனைப்பிரிவு அனுமதி – தண்டலம் ஊராட்சி – தண்டலம் கிராமம், புல எண்கள் 60/9, 10, 11A, 61/2, 3, 4, 5, 6, 61/8, 9, 10, 11,12, 13, 14, 15A, 15B, 16A, 17A, 22,23, 25A, 62/11, 12,13,14,15,16, 72/1, 2, 3,4,5,7,15,73/2A,3,4,5,6,7,8,9B, 10A –ல் 3.01.50 ஹெக்டேர் (அ) 30150 ச.மீ பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடுதல் சார்ந்து

பார்வை :- 1) இணை இயக்கநர் / துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் காஞ்சிபுரம் அவர்களின் ந.க.எண்.NRBFXVG4/2023 / TCP நாள் 14/08/2023

2) தண்டலம் ஊராட்சியின் தீர்மான எண் 98, நாள் 10.10.2023

<u>உத்திரவு :-</u>

திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி மன்றம், தண்டலம் கிராமம் புல எண்கள் 60/9, 10, 11A, 61/2, 3, 4, 5, 6, 61/8, 9, 10, 11,12, 13, 14, 15A, 15B, 16A, 17A, 22, 23, 25A, 62/11, 12,13,14,15,16,72/1,2,3,4,5,7,15,73/2A,3,4,5,6,7,8. 9B, 10A –ல் 3.01.50 ஹெக்டேர் (அ) 30150 ச.மீ பரப்பளவில் M/s.Four Squares Foundation Pvt Ltd., No.18, Ritherdon Road, Vepery, Chennai – 600007 என்பவருக்க சொந்தமான நிலத்தில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க பார்வை 2 ல் கண்டுள்ள கடிதத்த குறிப்பின் மூலம் "**NRBFXVG4/2023 /TCP Dt:14.08.2023**" என எண்ணிட்டு இணை இயக்கநர் / துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் காஞ்சிபுரம் அவர்கள் அளித்துள்ள தொழில்நுட்ப அங்கீகார எண்.SWPD/D.DTCP/KPM/Layout No.83/2023-ன்படியும், தண்டலம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண் 98, நாள் 10.10.2023 ன்படியும், தங்களால் அளிக்கப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு **தண்டலம் கிராம புல எண்கள்** 60/9, 10, 11A, 61/2, 3, 4, 5, 6, 61/8, 9, 10, 11,12, 13, 14, 15A, 15B, 16A, 17A, 22,23, 25A, 62/11, 12,13,14,15,16, 72/1,2,3,4,5,7,15,73/2A,3,4,5,6,7,8, 9B, 10A –ல் 3.01.50 ஹெக்டேர் (அ) 30150 ச.மீ பரப்பளவில் **மனை எண்கள் 1 முதல் 164 வரை** அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைத்துள்ள வரைபடத்தில் கண்டுள்ள விபரப்படியும் மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளுடன் மனைப்பிரிவுக்கு ஊராட்சியில் நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்படுகிறது.

## <u>நிபந்தனைகள்</u>

1) இணை இயக்கநர் / துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் காஞ்சிபுரம் அவர்களின் ந.க.எண்.NRBFXVG4/2023/TCP நாள் 14/08/2023–ல் இணைக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.

2) **தானப்பத்திரம் எண்** 8865/2023 ,**நாள்** 04/08/2023 தண்டலம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள சாலை மற்றும் பொது உபயோக இடங்களை எக்காரணம் கொண்டும் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்கூடாது.

3) தாங்களால் அளிக்கப்பட்டுள்ள சொத்திற்குரிய ஆவணங்கள் பிற்காலத்தில் தவறுதலாக அளிக்கப்பட்டது என்ற பட்சத்தில் இவ்வுத்திரவு தானாக இரத்தாகியதாகும். அதற்கு மனுதாரரே சட்டப்படி பொறுப்பாவார்.

4) இம்மனைப்பிரிவில் உள்ள மனைகளில் கட்டிடம் கட்டுவதற்கு முன்பாக இவ்வூராட்சியில் வரைபட அனுமதி பெறப்பட வேண்டும்.

5) இம்மனைப்பிரிவு இடத்தினை பிற்காலத்தில் அரசால் நில ஆர்ஜிதம் செய்யும்பட்சத்தில் மனைதாரர் அதற்கு கட்டுப்பட்டவராவார்.

6) மனைப்பிரிவில் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

7) மேற்கண்ட நிபந்தனைகள் மீறினால் தங்களுக்கு வழங்கிய மனைப்பிரிவு அங்கீகாரம் தானாகவே இரத்தாகிவிடும் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு : வரைபடம் 2

For FOUR SQUARES FOUNDATION PRIVATE LIMITED

Director

தலைவர்
நெ.55, தண்டலம் ஊராட்சி,
திருப்பெரும்புதூர் ஒன்றியம்.

பெறுநர் :

**M/s. Four Squares Foundation Pvt Ltd.,**
No.18, Ritherdon Road,
Vepery, Chennai – 600007.

**நகல் :** இணை இயக்குநர் / துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், எண்.331/95, கோட்ரம்பாளையம் ரங்கசாமி குளம் அருகில், காஞ்சிபுரம், அவர்களுக்கு தகவலுக்கா பணிந்தனுப்பப்படுகிறது.